# சிங்கப்பூர் இலக்கியப் பரிசு 2008

## 1. விதிமுறைகளும் நிபந்தனைகளும்

### 1.1 தகுதி
18 அல்லது அதற்கும் மேற்பட்ட வயதுள்ள சிங்கப்பூர் குடிமக்களும் நிரந்தர வாசிகளும் இப்போட்டியில் பங்கேற்கலாம்.

### 1.2 பிரிவு
ஜனவரி 2006 லிருந்து டிசம்பர் 2007 வரையில் சிங்கப்பூரிலோ வெளிநாட்டிலோ வெளியிடப்பட்ட நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் ஆகியவை இப்போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

### 1.3 பொருளும் கருவும்
சமர்ப்பிக்கப்படும் படைப்புகள் எந்த ஒரு பொருளையோ கருவையோ கொண்டிருக்கலாம்.

### 1.4 மொழி
ஒவ்வொரு பிரிவிலும் சமர்ப்பிக்கப்படும் படைப்புகள் சீனம், ஆங்கிலம், மலாய், தமிழ் ஆகிய ஏதேனும் ஓர் அதிகாரப்பூர்வ மொழியில் இருக்க வேண்டும்.

### 1.5 மூலம்
**(அ)** ஒவ்வொரு படைப்பும் படைப்பாளரின் மூல படைப்பாக இருத்தல் வேண்டும்.
**(ஆ)** சமர்ப்பிக்கப்படும் படைப்பு ஒரே ஒரு படைப்பாளருக்குச் சொந்தமாக இருத்தல் அவசியம்.
**(இ)** பிரசுரமான படைப்புகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தகுதி பெறுவதற்கு, நூல்கள் பொது வர்த்தக பாணியில் அச்சிடப்பட்டு பிரசுரமாகியிருக்க வேண்டும்.
**(ஈ)** அசாதாரண சூழலில், படைப்பாளியின் சொந்த வெளியீடுகளை ஏற்பாட்டாளர்களின் ஒப்புதலோடு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் உரிமை நீதிபதிகளுக்கு உண்டு.

## 1.6 படைப்புகளின் அளவு

(அ) சிறு கதைகள்

ஒவ்வொரு மனுவும் குறைந்தது ஆறு கதைகளைக் கொண்டு, மொத்தம் 100 பக்கங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(ஆ) நாவல்கள்

ஒவ்வொரு படைப்பிலும் குறைந்த பட்சம் 30,000 சொற்கள் இருக்க வேண்டும்.

(இ) கவிதை

ஒரு கவிதைக்கோ கவிதை தொகுப்புக்கோ குறைந்த பட்சச் சொற்கள் நிர்ணயிக்கப்படவில்லை. ஆயினும் நீதிபதிகளின் பார்வையில் கவிதைகள் மிகச் சிறந்த படைப்புகளாக அமைந்திருத்தல் வேண்டும்.

## 1.7 படைப்புகள் எண்ணிக்கை

**(அ)** போட்டியில் பங்கெடுப்போர் குறிப்பிட்ட ஓர் ஆண்டுக்குரிய ஒன்றுக்கு மேற்பட்ட வெவ்வேறான படைப்புகளை அனுப்பலாம்.

**(ஆ)** ஒரு படைப்பை ஒரேயொரு மொழியில் மட்டுமே அனுப்பி வைக்க வேண்டும் .

(இ) ஒவ்வொரு படைப்போடும் அதிகாரப் பூர்வ நுழைவுப் படிவமும் இணைக்கப் பட்டிருக்கவேண்டும் .

**(ஈ)** படைப்புகளை எழுத்தாளரோ வெளியீட்டாளரோ சமர்ப்பிக்கலாம்.

## 1.8 தேர்வு

**(அ)** ஒவ்வொரு மொழிப்பிரிவுக்கும் குறைந்த பட்சம் 3 நடுவர்கள் இருப்பர்.

**(ஆ)** அவர்களின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் பற்றி எத்தகைய கடிதப் போக்கு வரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

**(இ)** சமர்ப்பிக்கப்பட்ட படைப்புகள் எதுவும் நடுவர்கள் பார்வையில் எதிர்பார்க்கப்பட்ட அளவு சிறப்பாக இல்லையெனில், பரிசு கொடுக்காமல் இருக்கும் உரிமை ஏற்பாட்டாளர்களுக்கு உண்டு.

## 1.9 முடிவு நாள்

**(அ)** படைப்புகளை அனுப்ப வேண்டிய இறுதிநாள் மே 30 2008, மாலை 5.00 மணி. அஞ்சலில் தொலைந்த அல்லது சேதமுற்ற படைப்புகளுக்கு ஏற்பாட்டாளர்கள் பொறுப்பேற்க மாட்டார்கள்.

## 2. விருது

### 2.1 சிங்கப்பூர் இலக்கியப் பரிசு

**(அ)** சிங்கப்பூர் இலக்கியப் பரிசுக்குத் தேர்வுபெறும் ஒவ்வொருமொழிப் பிரிவின் படைப்பாளியும் $10,000 தொகையும் சிறப்பு நினைவுத் தட்டும் பெறுவார்.

**(ஆ)** நடுவர்கள் ஒவ்வொரு மொழிப்பிரிவுக்கும் ஒரேயொரு சிங்கப்பூர் இலக்கியப் பரிசு மட்டுமே வழங்குவர். எந்த ஓர் ஆண்டிலேனும் சிங்கப்பூர் இலக்கியப் பரிசுக்குத் தகுதி வாய்ந்த படைப்புகள் கிடைக்கவில்லையெனில் பரிசுகள் வழங்கப் படமாட்டா.

**(இ)** சிங்கப்பூர் இலக்கியப் பரிசுக்கு ஒருவரும் தகுதிபெறவில்லை என்றால் அதற்குப் பதிலாக நடுவர்கள் சிறப்புப் பரிசாக $5,000 அல்லது பாராட்டுப் பரிசாக $1,000 வழங்குவார்கள்.

### 2.2 தேர்வுப் பட்டியல்

சிங்கப்பூர் இலக்கியப் பரிசுக்காகப் பரிசீலனைக்குத் தேர்வுசெய்யப்பட்ட படைப்புகளின் பட்டியலை நீதிபதிகள் செப்டம்பர் 30 2008இல் அறிவிப்பார்கள். அவ்வாறு பரிசீலனைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புக்குரிய எழுத்தாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

### 2.3 வெற்றியாளர்களை அறிவித்தல்

சிங்கப்பூர் இலக்கியப் பரிசு பெறுவோரின் பெயர்ப்பட்டியலை நீதிபதிகள் நவம்பர் 2008இல் அறிவிப்பார்கள். அதே மாதத்தில் வெற்றியாளர்களுக்குப் நவம்பர் 29 2008இல் பரிசளிப்பு வழங்கும் விழாவும் நடைபெறும். விழா நடைபெறுவதற்குச் சில நாட்கள் முன்னதாக வெற்றியாளர்களுக்கு முடிவுகள் தெரிவிக்கப்படும்.

## 3. ஏற்பாட்டுக் குழு

ஏற்பாட்டுக் குழுவில் இடம்பெறும் உறுப்பினர்களைச் சிங்கப்பூர் தேசிய புத்தக மேம்பாட்டு மன்றம் நியமிக்கும். ஏற்பாட்டுக்குழுவே போட்டியை நிர்வகிப்பதுடன் நீதிபதிகளையும் தேர்வு செய்யும்.

## 4. சமர்ப்பித்தல்

படைப்புகள் அனைத்தையும் (ஒவ்வொரு படைப்பிலும் 6 பிரதிகள் இருக்க வேண்டும்) நேரிலோ பதிவு அஞ்சலிலோ,

"சிங்கப்பூர் இலக்கியப் பரிசு 2008" என உறையில் குறிப்பிட்டுக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்:

Singapore Literature Prize 2008
National Book Development Council
Geylang East Community Library
50 Geylang East Avenue 1
Singapore 389777

விதிமுறைகளும் நிபந்தனைகளும் சீனம், மலாய், தமிழ் ஆகிய மொழிகளில் தேவையென்றால் info@bookcouncil.sg எனும் மின் அஞ்சல் அல்லது 68488290 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

மொழிபெயர்ப்பில் ஏதேனும் ஐயப்பாடு இருந்தால் ஆங்கில விதிமுறைகளும் நிபந்தனைகளும் பின்பற்றப்படும்.